# இணைப்பு - 2.1

## 28.11.97 அன்று மாலை 3 மணி அளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற முதல்நிலைக் குழுவின் கூட்ட நடவடிக்கை குறிப்பு.

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவது குறித்து ஆராய அமைக்கப்பட்ட முதல் நிலைக் குழுவின் முதல் கூட்டம் 28.11.97 அன்று மாலை மூன்று மணியளவில் தலைமைச் செயலகம், பிராதான கட்டிடத்திலுள்ள கூட்ட அறையில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) மற்றும் குழுவின் அமைப்பாளர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

2. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்

1. திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர்.தி.மு.க.
2. திரு.பரமத்தி சண்முகம், தி.மு.க..,
3. திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர், தா.மா.க.
4. திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர், அ.இ.அ.தி.மு.க.
5. திரு.ஏ.எம்.கோபு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,
6. திரு.பி.அய்யாக்கண்ணு, திருச்சி புறநகர் ஜனதா தளம் தலைவர்
7. டாக்டர் வா.மைத்ரேயன், பா.ஜ.க

3. செயலரின் முகவுரையுடன் கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்தில் இதுவரை ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்தும், கூட்டத்தின் பொருள் நிரல் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இது முதல் நிலைக் குழுவின் முதல் கூட்டமாதலால் கீழ்கண்ட முடிவை அனைத்து உறுப்பினர்களும் செயற்படுத்துவதென முடிவு மேற்கொள்ளப்பட்டது.

குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஊராட்சி மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களைச் சந்திப்பது எனவும், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் அளிக்க வேண்டிய அதிகாரம் குறித்து அளிக்கப்படும் மனுக்களை உறுப்பினர்களின் கருத்துக்களுடன் எழுத்து மூலமாக நேரிடையாக, செயலர், ஊரக வளர்ச்சி துறை அவர்களுக்கு பதினைந்து தினங்களுக்குள்ள அனுப்பி வைக்க வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது. அம்மனுக்களின் மீதான இறுதி முடிவை அடுத்த கூட்டத்தில் குழு மேற்கொள்ளும் என தீர்மானிக்கப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்.